சாராம்சம்: இனிய குழந்தைகளே, உங்கள் பாக்கியத்தை மேன்மை ஆக்குவதற்கு சத்குரு வந்துவிட்டார். ஆகவே உங்கள் நடத்தை மிக மிக இராஜரீகமாக இருக்கட்டும்.

கேள்வி: எவரையுமே குற்றஞ்சாட்ட முடியாத எந்தத் திட்டம் நாடகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது?

பதில்: இப்பழைய உலகின் விநாசத்திற்கான திட்டம் நாடகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதையிட்டு எவரையுமே குற்றஞ்சாட்ட முடியாது. இந்த நேரத்தில் விநாசத்தின் பொருட்டுத் பஞ்சதத்துவங்கள் எல்லாம் வலுவான சீற்றம் கொண்டுள்ளன. எங்கும் பூகம்பங்கள் ஏற்படும். கட்டிடங்கள் விழும். வெள்ளப் பெருக்குகளும், பஞ்சமும் ஏற்படும். இதனாலேயே தந்தை கூறுகின்றார்: குழந்தைகளே, உங்கள் புத்தியின் யோகத்தைப் பழைய உலகத்தில் இருந்து அகற்றி விடுங்கள். சத்குருவின் ஸ்ரீமத்தைப் பின்பற்றுங்கள். உயிருடன் இருக்கும் போதே சரீர உணர்வைத் துறந்து விடுங்கள். உங்களை ஓர் ஆத்மாவாகக் கருதித் தந்தையை நினைவு செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

பாடல்: நாங்கள் பின்பற்றுகின்ற இப்பாதையில் விழாதிருப்பதற்கு கவனமாகவும் இருக்க வேண்டும்.

ஓம் சாந்தி. நீங்கள் பின்பற்ற வேண்டிய வழி எது? நீங்கள் குருவின் வழியைப் பின்பற்ற வேண்டும். அந்த குரு யார்? அமர்ந்திருக்கும் போதும் நடக்கும்போதும் மனிதர்களின் உதடுகளிலிருந்து பின்வரும் வார்த்தைகள் வெளிப்படுகின்றன: ஆஹா குருவே! பல குருமார் உள்ளனர். ஆஹா குருவே! என்று யாருக்குக் கூறுவீர்கள்? யாருடைய புகழ் பாடுவீர்கள்? ஒரேயொரு தந்தையே சத்குரு ஆவார். பக்தி மார்க்கத்தில் பல குருமார்கள் இருக்கிறார்கள். சிலர் ஒருவரையும் ஏனையோர் இன்னொருவரையும் போற்றுகிறார்கள். உண்மையான சத்குருவாகிய அந்த ஒரேயொருவரே போற்றப்படுகிறார் என்பது குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் உள்ளது. உண்மையான சத்குரு ஒருவர் இருப்பதனால் போலியானவர்களும் இருக்கவேண்டும். உண்மையானவர் சங்கமயுகத்திலேயே இருப்பார். பக்தி மார்க்கத்திலும் சத்தியமானவர் என்று அவரையே போற்றுகிறார்கள். அதியுயர்ந்த தந்தையே சத்தியமானவர். அவரே முக்தி அளிப்பவரும் வழிகாட்டியும் ஆவார். இக்காலத்தில் குருமார் வழிகாட்டிகளாகி, உங்களை ஸ்நானம் செய்வதற்குக் கங்கைக்கும் யாத்திரைகளுக்கும் அழைத்துச் செல்கிறார்கள். இந்த சத்குரு அப்படியானவர் அல்ல. அனைவரும் சத்குருவை நினைவு செய்து அழைக்கின்றார்கள். “ஓ தூய்மையாக்குபவரே வாருங்கள்!” ஒரேயொரு சத்குருவே தூய்மைப்படுத்துபவரென அழைக்கப்படுகின்றார். அவரால் மாத்திரமே ஆத்மாக்களை தூய்மைப்படுத்த முடியும். அந்த குருமார்களால் எவரையும் தூய்மைப்படுத்த முடியாது. அவர்கள் “சதா என்னையே நினைவு செய்யுங்கள்” எனக் கூறுவதில்லை. மக்கள் கீதையைக் கற்றாலும் அதன் அர்த்தத்தை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. ஒரேயொருவரே சத்குரு என்பதை அவர்கள்

புரிந்து கொள்வார்களாயின், அவர்கள் தம்மைக் குருவென அழைக்க மாட்டார்கள். நாடகத்திற்கேற்ப, பக்திமார்க்கத் திணைக்களம் முற்றிலும் புறம்பானது. அந்தப் பாதையில் பல குருமார்களும் பல பக்தர்களும் இருக்கின்றனர். இங்கு இவர் ஒருவரே உள்ளார். தேவர்கள் முதலாம் இலக்கத்தில் இருந்தனர். அவர்கள் இப்போது கடைசி இலக்கத்தில் இருக்கின்றனர். தந்தை வந்து அவர்களுக்குச் சுவர்க்க இராச்சிய உரிமையை கொடுக்கிறார். ஆகவே ஏனைய அனைவரும் இயல்பாகவே வீடு திரும்ப வேண்டும். இதனாலேயே அனைவருக்கும் சத்கதி அருள்பவர் அந்த ஒரேயொருவரே என்று கூறப்படுகின்றது. ஒவ்வொரு சக்கரத்திலும் சங்கமயுகத்திலேயே தேவதர்மம் ஸ்தாபிக்கப்படுகின்றது என நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். நீங்களே அதிமேலானவர்கள் ஆகுகின்றீர்கள். நீங்கள் வேறெதுவும் செய்வதில்லை. முக்தியும், சத்கதியும் அளிப்பவர் ஒரேயொருவரே என நினைவு கூரப்படுகின்றது. இது தந்தையின் புகழே ஆகும். சங்கமயுகத்திலேயே முக்தியும் சற்கதியும் பெறப்படுகின்றது. சத்திய யுகத்தில் ஒரேயொரு தர்மம் மட்டுமே நிலவும். இதுவும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமே. எவ்வாறாயினும் இந்த விவேகத்தை யார் உங்களுக்குக் கொடுப்பார்கள்? தந்தையே வந்து உங்களுக்கு வழியைக் காட்டுகிறார் என்பதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். அவர் யாருக்கு ஸ்ரீமத் வழங்குகிறார்? ஆத்மாக்களுக்கே. அவரே தந்தையும், ஆசிரியரும் சத்குருவும் ஆவார். அவர் உங்களுக்கு ஞானத்தைக் கற்பிக்கின்றார். ஏனைய குருமார்கள் எல்லோரும் பக்தியையே கற்பிக்கிறார்கள். நீங்கள் இந்த ஞானத்தின் மூலம் தந்தையிடம் இருந்து சத்கதி பெற்று இந்தப் பழைய உலகை விட்டு நீங்கி விடுகிறீர்கள். இதுவும் உங்கள் எல்லையற்ற துறவாகும். உங்கள் 84 பிறவிச் சக்கரம் இப்போது முடிவுக்கு வருகிறது எனத் தந்தை விளங்கப்படுத்தி உள்ளார். இந்த உலகமும் இப்போது முடிவுறும் தறுவாயில் உள்ளது. ஒருவர் கடும்நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் போது அவர்கள் கூறுவார்கள்: இவர் மரணிக்கும் தறுவாயில் உள்ளார். எனவே அவரை நினைவு செய்வதில் என்ன பயன்? அந்த சரீரம் அழிக்கப்பட்டதும் அந்த ஆத்மா சென்று இன்னொரு சரீரத்தை எடுப்பார். நம்பிக்கை எல்லாமே அற்றுப் போய்விடும். வங்காளத்தில் ஒருவரைப் பற்றி நம்பிக்கை இழந்து விட்டால், ஆத்மா கங்கையிலேயே சரீரத்தை விட்டு விடும்படி அவரைக் கங்கைக் கரைக்குக் கொண்டு செல்வார்கள். தேவ விக்கிரகங்களை வழிபாடு செய்துவிட்டு ‘அமிழ்ந்துவிடு!, அமிழ்ந்துவிடு!’ எனக் கூறுவார்கள். பழைய உலகம் முழுவதுமே அமிழ்ந்து போக உள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். வெள்ளப்பெருக்கும், தீயும் ஏற்படும். மக்கள் பட்டினியால் இறப்பார்கள். அந்த நிலைமைகள் ஏற்படும். பூகம்பங்களினால் கட்டிடங்கள் இடிந்துவிடும். இந்த நேரத்தில் பஞ்சதத்துவங்கள் வலிமை மிக்கவையாகி அனைத்தையும் அழித்துவிடும். இத்தகைய சூழ்நிலைகள் உலகம் முழுவதிலும் ஏற்படும். பல்வேறு வகையான மரணங்கள் சம்பவிக்கும். குண்டுகள் நஞ்சினால் நிரப்பப்பட்டுள்ளன. சிறிது மூச்சு எடுத்தாலும், அவர் உணர்வற்று விடுவார். என்ன நிகழப் போகின்றது எனக் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். இவற்றை எல்லாம் தூண்டுபவர் யார்? தந்தை இதனைத் தூண்டவில்லை. அது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இதற்கு எவரையும் குற்றஞ்சாட்ட முடியாது. இத்திட்டம் நாடகத்திலே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பழைய உலகம் நிச்சயமாக மீண்டும் புதியதாகும். இயற்கை அனர்த்தங்களும் நிகழும். விநாசம் நிகழவே வேண்டும். புத்தியின் யோகமானது

இப்பழைய உலகத்திலிருந்து அகற்றப்படவே வேண்டும். இதுவே எல்லையற்ற துறவு எனப்படுகின்றது. நீங்கள் இப்போது ‘ஆஹா சத்குரு! ஆஹா!’ என்று கூறுகின்றீர்கள். நீங்கள் இப்பாதையை எங்களுக்குக் காண்பித்துள்ளீர்கள். குழந்தைகளாகிய உங்களுக்குக் கூறப்பட்டுள்ளது: அவருக்கு அவதூறு ஏற்படும் வகையில் நீங்கள் நடந்து கொள்ளக் கூடாது. நீங்கள் இங்கே ஜீவனுடன் மரணிக்க வேண்டும். நீங்கள் சரீரங்களைத் துறந்து உங்களை ஆத்மாக்களாகக் கருதுங்கள். நீங்கள் சரீரத்திலிருந்து விடுபட்டு ஆத்ம உணர்வு உடையவராகித் தந்தையை நினைவு செய்யுங்கள். நீங்கள் நல்லதொரு விடயத்தைக் கூறுகின்றீர்கள்: ஆஹா! சத்குரு ஆஹா! பரலோக சத்குருவே (இவ்வுலகத்திற்கு அப்பால் உள்ளவர்) போற்றப்படுகிறார். பல லௌகீக குருமார்கள் உள்ளனர். பக்தி மார்க்கத்திலும் குறிப்பிடப்படுகின்ற பெயரைக் கொண்ட ஒரேயொரு சத்தியமான சத்குருவே உள்ளார். உலகம் முழுவதற்கும் தந்தையானவர் ஒரேயொருவரே. புதிய உலகம் எவ்வாறு ஸ்தாபிக்கப்படுகிறது என்பது கூட எவருக்கும் தெரியாது. சமயநூல்களில் பிரளயத்தின் பின்னர் ஸ்ரீகிருஷ்ணர் அரசமிலையில் மிதந்து வருவதாகவும் சித்தரித்துள்ளார்கள். அவர் அரசமிலையில் வந்திருக்க முடியாது என்பதை நீங்கள் இப்போது புரிந்து கொள்கின்றீர்கள். ஸ்ரீ கிருஷ்ணரைப் புகழ்வதில் எப்பயனும் இல்லை. உங்களை மேலேறும் ஸ்திதிக்குக் கொண்டு செல்லக்கூடிய சத்குருவை நீங்கள் இப்போது கண்டு கொண்டீர்கள். இவ்வாறு கூறப்படுகிறது: மேலேறும் ஸ்திதியின் மூலம் அனைவருக்கும் நன்மை உண்டு. ஆகவே ஆன்மீகத் தந்தை இங்கே அமர்ந்திருந்து ஆத்மாக்களுக்கு விளங்கப்படுத்துகிறார். ஆத்மாக்களாகிய நாங்களே 84 பிறவிகள் எடுத்துள்ளோம். ஒவ்வொரு பிறவியிலும் ஆத்மாக்களுக்கு வெவ்வேறு பெயர்களும் வடிவங்களும் இருக்கின்றன. இன்ன இன்னார் 84 பிறவிகள் எடுத்துள்ளார் என நீங்கள் கூறமுடியாது. இல்லை. ஆத்மாவே 84 பிறவிகளை எடுக்கின்றார். சரீரம் மாறிக்கொண்டே இருக்கிறது. நீங்கள் இவ்விடயங்கள் அனைத்தையும் உங்கள் புத்தியில் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இந்த ஞானம் முழுவதையும் உங்கள் புத்தியில் கொண்டிருக்க வேண்டும். வருகின்ற எவருக்கும் இவ்வாறு விளங்கப்படுத்துங்கள்: ஆரம்பத்தில் தேவர்களின் இராச்சியமே இருந்தது. பின்னர் மத்திய பகுதியில் இராவண இராச்சியம் ஆரம்பித்தது. தொடர்ந்தும் நீங்கள் ஏனியில் கீழிறங்கினீர்கள். சத்தியயுகத்தில் நீங்கள் சதோபிரதானாக இருந்தீர்கள். பின்னர் சதோ, ரஜோ, தமோ நிலைகளில் தொடர்ந்தும் கீழிறங்கி வந்தீர்கள். சக்கரம் தொடர்ந்தும் சுழல்கிறது. சிலர் வினவுவார்கள்: பாபா எதற்காக எங்களை இந்த 84 பிறவிச் சக்கரத்தினுள் கொண்டு வந்தார்? எவ்வாறாயினும், இந்த உலகச்சக்கரம் அநாதியாகவே உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் அதன் ஆரம்பம், மத்தி, இறுதி பற்றி அறிந்திருக்க வேண்டும். ஒரு மனிதன் இதை அறியாதிருந்தால், அவன் ஒரு நாஸ்திகனே, இதை அறிந்து கொள்வதால் நீங்கள் மேன்மையான ஓர் அந்தஸ்தைப் பெறுவீர்கள். இந்தக் கல்வி மிக மேன்மையானது. அனைத்திலும் உயர்ந்த அந்தஸ்தை கோருவதற்கான ஒரு முக்கியமான பரீட்சையில் சித்தி அடைவோர், தங்கள் இதயத்தில் பெருமகிழ்ச்சியை அனுபவம் செய்வார்கள். இலக்ஷ்மியும், நாராயணனும் தமது முன்னைய பிறவியில் இந்த ஞானத்தைக் கற்றதன் மூலம் சாதாரண மனிதரிலிருந்து தேவர்கள் ஆகினார்கள். இந்தக் கல்வி மூலம் அவர்களது இராச்சியம் ஸ்தாபிக்கப்படுகிறது. கற்பதன் மூலம் இத்தகைய மேன்மையான ஓர் அந்தஸ்து கிடைக்கிறது. இது ஓர் அற்புதம்! பெரிய

ஆலயங்களைக் கட்டியவர்கள், கல்விமான்கள் போன்றவர்களிடம் சத்தியயுக ஆரம்பத்தில் இலக்ஷ்மியும், நாராயணனும் எவ்வாறு பிறப்பு எடுத்தார்களென நீங்கள் வினவினால், அவர்களால் உங்களுக்கு கூற இயலாமல் இருக்கும். கீதையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இராஜயோகம் இதுவே என்பதை நீங்கள் அறிவீர்கள். மக்கள் தொடர்ந்தும் கீதையைக் கற்று வந்துள்ளார்கள். ஆனாலும் அதனால் எந்த நன்மையையும் அடையவில்லை. தந்தை இப்போது இங்கே அமர்ந்திருந்து உங்களுக்கு இதைக் கூறுகிறார். நீங்கள் கூறுகிறீர்கள்: பாபா உங்களை 5000 வருடங்களுக்கு முன்னரும் சந்தித்தோம். அவரை ஏன் சந்தித்தீர்கள்? சுவர்க்க ஆஸ்தியைப் பெறுவதற்கும், இலக்ஷ்மி நாராயணன் போல் ஆகுவதற்குமே. இங்கு வருகின்ற இளையோர், முதியோர், வயோதிபர் ஆகியோருக்கு நிச்சயமாக இது கற்பிக்கப்பட்டுள்ளது. இதுவே உங்கள் இலக்கும் குறிக்கோளும் ஆகும். இதுவே சத்திய நாராயணனின் கதையாகும். ஓர் இராச்சியம் ஸ்தாபிக்கப்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். இதை மிக நன்றாகப் புரிந்து கொள்பவர்கள் அகத்தே சந்தோஷத்தை அனுபவம் செய்வார்கள். பாபா வினவுகிறார்: இராச்சியத்தைக் கோருவதற்கான தைரியம் உங்களிடம் உள்ளதா? அவர்கள் பதில் அளிக்கின்றார்கள்: பாபா, ஏன் இல்லை? நாங்கள் மனிதனிலிருந்து நாராயணனாக மாறுவதற்குக் கற்கின்றோம். நீண்ட காலமாக நாங்கள் எங்களை ஒரு சரீரமாகவே கருதினோம். தந்தை எங்களுக்கு இப்போது நியாயமான வழியைக் காட்டியுள்ளார். ஆத்ம உணர்வுடையவர் ஆகுவதற்கு முயற்சி தேவை. நீங்கள் மீண்டும், மீண்டும் பெயரிலும் வடிவத்திலும் அகப்பட்டு விடுகிறீர்கள். தந்தை கூறுகின்றார்: நீங்கள் பெயரிலும், வடிவத்திலும் இருந்து விடுபட்டிருக்க வேண்டும். ஆத்மா என்பதும் ஒரு பெயரே. தந்தையே பரமாத்மாவான பரமதந்தை ஆவார். ஒரு பௌதீகத் தந்தை, ஒருபோதும் பரமதந்தை என்று அழைக்கப்படுவதில்லை. பரம் எனும் வார்த்தை ஒரேயொரு தந்தைக்கே வழங்கப்பட்டுள்ளது. அவருக்கே நீங்கள் 'ஆஹா! குருவே!' என்று கூறுகிறீர்கள். நீங்கள் சீக்கியர்களுக்கும் விளங்கப்படுத்த முடியும். இதன் முழு விபரமும் கிரந்தத்தில் (சீக்கிய சமய நூல்) உள்ளது. அவரைப் பற்றிய முழு விபரமும், கிரந்தம், ஜப் சஹிப், சுக்மணி என்பனவற்றில், விபரித்திருப்பதைப் போல் வேறெந்த சமயநூல்களிலும் விபரிக்கப்படவில்லை. இந்த இரண்டு வார்த்தைகளுமே உள்ளன. தந்தை கூறுகிறார்: சஹிபை (பிரபு) நினைவு செய்யுங்கள், அப்பொழுது 21 பிறவிகளுக்கு நீங்கள் சந்தோஷத்தைப் பெறுவீர்கள். இதையிட்டுக் குழப்பம் அடைதல் என்ற கேள்விக்கே இடமில்லை. தந்தை விளங்கப்படுத்தி உங்களுக்கு அனைத்தையும் இலகுவாக ஆக்குகின்றார். எத்தனையோ இந்துக்கள் சீக்கியர்களாக மதம் மாற்றப்பட்டுள்ளனர். மனிதர்களுக்கு வழியைக் காட்டுவதற்காக நீங்கள் பல படங்கள் முதலியவற்றை உருவாக்குகிறீர்கள். நீங்கள் மிக இலகுவாக விளங்கப்படுத்தலாம்: நீங்கள் வேறொரு மதத்தினுள் சென்ற ஓர் ஆத்மா. இது பல்வகைப்பட்ட மதங்களின் விருட்சமாகும். வேறு எவருக்கும் கிறிஸ்து எவ்வாறு வருகிறாரெனத் தெரியாது. ஒரு புதிய ஆத்மா கர்மவேதனை எதனையும் அனுபவம் செய்ய முடியாதென பாபா விளங்கப்படுத்தி உள்ளார். தனக்குத் தண்டனை கிடைக்கக் கூடியதாக கிறிஸ்து ஆத்மா எந்தப் பாவச்செயலையும் செய்யவில்லை. வந்தவர் ஒரு சதோபிரதான் ஆத்மாவே. எவருடைய சரீரத்தில் அவர் பிரவேசித்தாரோ, அவரே சிலுவையில் அறையப்பட்டார். கிறிஸ்து அல்ல. அவர் நீங்கிச் சென்று இன்னொரு சரீரத்தைப் பெற்று உயர்ந்த அந்தஸ்தைக் கோரினார். பாப்பாண்டவரின் படமும் உள்ளது.

உண்மையில், இந்த வேளையில் முழு உலகமுமே ஒரு சதப் பெறுமதியேனும் அற்றதாக உள்ளது. நீங்களும் அவ்வாறே இருந்தீர்கள். இப்போது நீங்கள் பவுண் பெறுமதி உள்ளவர்கள் ஆகுகின்றீர்கள். அவர்கள் சென்ற பின்னர், வாரிசுகள் அவை அனைத்தையும் பயன்படுத்தி வாழ்வார்கள் என்றில்லை. இல்லவே இல்லை. நீங்கள் கைகள் நிரம்பியவாறே செல்வீர்கள். ஏனையோர் அனைவரும் வெறுங்கையுடனேயே செல்வார்கள். நீங்கள் நிறைந்தவர்கள் ஆகுவதற்குக் கற்கின்றீர்கள். சென்ற கல்பத்தில் வந்தவர்கள், மீண்டும் வருவார்களென்பதும் உங்களுக்குத் தெரியும். அவர்கள் சிறிதளவையேனும் செவிமடுத்ததும் வருவார்கள். நீங்கள் அவர்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் காண்பீர்கள் என்றில்லை. நீங்கள் பல பிரஜைகளை உருவாக்குகிறீர்கள். பாபாவால் அனைவரையும் காண இயலாது. அவர்கள் சிறிதளவையேனும் செவிமடுப்பதால் பிரஜைகள் உருவாக்கப்படுகின்றனர். அவர்களை நீங்கள் கணக்கிட முடியாது. குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது சேவையில் இருக்கிறீர்கள். பாபாவும் சேவையில் இருக்கிறார். பாபாவினால் சேவை செய்யாதிருக்க முடியாது. அவர் தினமும் காலையில் உங்களுக்குச் சேவை செய்ய வருகிறார். மக்களும் காலையிலேயே ஆன்மீக ஒன்றுகூடல்களைக் கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் அனைவரும் ஓய்வாக இருக்கிறார்கள். பாபா கூறுகின்றார்: குழந்தைகளாகிய நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்து அதிகாலையில் வரவும் கூடாது. இரவிலும் அதிகம் பிந்தியும் வரக்கூடாது. ஏனெனில் நாளுக்கு நாள் உலகம் சீரழிந்து கொண்டே போகிறது. இதனாலேயே ஒவ்வொரு தெருவிலும் ஒரு நிலையம் இருக்க வேண்டும். அப்பொழுதே நீங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டதும் இலகுவாகவும், விரைவாகவும் நிலையத்தைச் சென்றடைந்து விடலாம். உங்கள் எண்ணிக்கை அதிகரித்ததும், இராச்சியம் ஸ்தாபிக்கப்படும். தந்தை மிக இலகுவாக விளங்கப்படுத்துகின்றார். இராஜயோகம் மூலம் ஸ்தாபனை நடைபெறுகிறது. அப்போது உலகின் ஏனைய பகுதிகள் இருக்கமாட்டாது. அதிகளவில் பிரஜைகள் உருவாக்கப்படுகின்றனர். மாலையும் உருவாக்கப்பட வேண்டும். பிரதானமான விடயம் யாதெனில், பலருக்கும் சேவை செய்து, அவர்களைத் தம்மைப்போல் ஆக்குபவர்கள், மாலையின் மணிகள் ஆகுகின்றார்கள். மக்கள் மாலையின் மணிகளை உருட்டுகிறார்கள். ஆனால் அதன் அர்த்தத்தை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. மக்களின் புத்தியானது மணிகளை உருட்டுவதில் மும்முரமாக இருக்கும் பொருட்டு, பல குருமார்கள், அவர்களுக்கு மணிமாலையைக் கொடுக்கிறார்கள். காமமே மிகக்கொடிய எதிரி. நாளுக்கு நாள் அனைத்துமே மிகவும் உக்கிரம் அடையும். இந்த உலகம் மிகவும் அழுக்காக இருப்பதால் ஆத்மாக்கள் நாளுக்கு நாள் தமோபிரதான் ஆகிக் கொண்டிருக்கின்றனர். பலர் பாபாவிடம் கூறுகிறார்கள்: உண்மையில் நாங்கள் சலிப்படைந்து விட்டோம்! விரைவில் எங்களை சத்திய யுகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்! தந்தை கூறுகிறார்: பொறுமையாக இருங்கள்! ஸ்தாபனை நிகழும் என்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவாதமே உங்களை அங்கே எடுத்துச் செல்லும். மேலும் ஆத்மாக்களாகிய நீங்கள் பரந்தாமத்தில் இருந்து வந்தீர்கள் எனவும், இப்போது நீங்கள் அங்கு திரும்பிச் செல்லவேண்டும் எனவும் குழந்தைகளாகிய உங்களுக்குக் கூறப்பட்டுள்ளது. பின்னர் உங்கள் பாகத்தை நடிப்பதற்காகக் கீழே வருவீர்கள். ஆகவே நீங்கள் பரந்தாமத்தை நினைவு செய்யவேண்டும். தந்தை கூறுகிறார்: சதா என்னை மாத்திரம் நினைவு செய்வதனால் உங்கள் பாவங்கள் அழிக்கப்படும்.

அனைவருக்கும் இச்செய்தியை வழங்குங்கள். வேறு தூதுவர் போன்றோர் எவரும் இல்லை. அந்த மத ஸ்தாபகர்கள் ஆத்மாக்களை முக்தி தாமத்திலிருந்து கீழே அழைத்து வருகின்றார்கள். அதன் பின்னர், அவர்கள் ஏணியில் கீழிறங்க வேண்டும். ஆத்மாக்கள் முற்றிலும் தமோபிரதான் ஆகும் போது, தந்தை வந்து அனைவரையும் சதோபிரதான் ஆக்குகிறார். உங்களுக்காகவே அனைவரும் வீடு திரும்ப வேண்டியுள்ளது. உங்களுக்குப் புதிய உலகம் தேவைப்படுகிறது, அல்லவா? இந்த நாடகம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளாகிய நீங்கள் பெரும் போதையைக் கொண்டிருக்க வேண்டும். அச்சா.

இனிமையிலும் இனிமையான அன்புக்குரிய எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும் ஆன்மீகத்தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. உங்கள் சரீரத்தின் பெயர், ரூபம் இரண்டிலும் இருந்தும் விடுபட்டு, ஆத்ம உணர்வுடையவர் ஆகுங்கள். சத்குருவை அவமரியாதை செய்யக்கூடிய நடத்தை எதையும் ஒருபோதும் கொண்டிராதீர்கள்.
2. மாலையின் ஒரு மணி ஆகுவதற்கு, பலரை உங்களுக்குச் சமமாக்கும் சேவையைச் செய்யுங்கள். நாங்கள் இராச்சியத்தைக் கோருவதற்காகக் கற்கின்றோம் என்ற உள்ளார்ந்த சந்தோஷத்தைப் பேணுங்கள். இந்தக் கல்வி சாதாரண மனிதரிலிருந்து நாராயணன் ஆகுவதற்கானது.

ஆசீர்வாதம்: சதா நினைவுசெய்வதன் மூலம் சகல பொக்கிஷங்களுக்கும் உரிமை உடையவராகி, அழியாத வருமானத்தை சேமித்துக் கொள்வீர்களாக.

சதா நினைவுசெய்வதன் மூலம், நீங்கள் ஒவ்வோர் அடியிலும் தொடர்ந்தும் வருமானத்தை ஈட்டி, சந்தோஷம், அமைதி, பேரானந்தம் மற்றும் அன்பு என அனைத்து பொக்கிஷங்களுக்கும் உரிமை உடையவர் என்ற அனுபவத்தைப் பெறுவீர்கள். எந்தவொரு வேதனையும் ஒரு வேதனையாக அனுபவம் செய்யப்பட மாட்டாது. சங்கமயுகத்தில், பிராமணர்கள் வேதனைப்பட முடியாது. ஏதாவது வேதனை இருக்குமாயின், தந்தையை ஞாபகப்படுத்தவே அது வருகின்றது. ரோஜாச் செடி தன்னை பாதுகாப்பதற்காக முள்ளைக் கொண்டிருப்பதைப் போன்று, தந்தையை உங்களுக்கு மென்மேலும் ஞாபகம் ஊட்டுவதற்குக் கஷ்டங்கள் கருவி ஆகுகின்றன.

சுலோகம்: உங்கள் அன்பு வடிவத்தின் அனுபவத்தைக் கூறுகிறீர்கள், இப்பொழுது உங்களுடைய சக்தியின் அனுபவத்தைக் கூறுங்கள்.

---ஓம் சாந்தி---

அவ்யக்த சமிக்ஞை: இப்பொழுது முழுமையாகவும் கர்மாதீத்தாகவும் ஆகுகின்ற ஆழமான அக்கறையைக் கொண்டிருங்கள்.

ஆசீர்வாதங்களை மாத்திரம் வழங்குகின்ற, இறுதி கர்மாதீத் ஸ்திதியின் பாகத்தை நீங்கள் சக்கார் வடிவத்தில் பார்த்தீர்கள். சமநிலையை கொண்டிருப்பதும் ஆசீர்வாதங்களை கொடுக்கின்ற அற்புதமும் சிறப்பியல்பாக இருந்தது. அவ்வாறாகவே தந்தையைப் பின்பற்றுங்கள். இதுவே இலகுவானதும்

சக்திமிக்கதுமான சேவையாகும். இப்பொழுது விசேட ஆத்மாக்களின் பாகம் கண்களின் ஊடாக அல்லது நெற்றி மீதுள்ள இரத்தினத்தினூடாக ஆசீர்வாதங்ளை வழங்குவதாகும்.